https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# நவீன கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைப் போக்குகள்

**து. சிலம்பரசு**
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
முதுகலை தமிழாய்வுத்துறை
இராஜேஸ்வரி வேதாசலம் அரசினர் கலைக்கல்லூரி
செங்கல்பட்டு.

**முனைவர் சி. செயந்தி**
உதவிப் பேராசிரியர், நெறியாளர், முதுகலை தமிழாய்வுத்துறை
இராஜேஸ்வரி வேதாசலம் அரசினர் கலைக்கல்லூரி
செங்கல்பட்டு.

## முன்னுரை

“மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்”; என்று கூறினார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஆனால் தற்போது பெண்கள் நிலை அவ்வளவு சிறப்பாக இல்லை ஆணுக்கு நிகராகவும் சுயமரியாதையுடனும் அவர்கள் நடத்தப்படவில்லை பெண்களின் உரிமைகள் ஒடுக்கப்படுகின்றன அவர்களின் ஆசைகள் கனவுகளும் நசுக்கப்படுகின்றன.

பெண்கள் தங்களின் எண்ணங்கள் சிந்தனைகள் கருத்துக்கள் வெளிப்படுத்தும் படைப்பாக இலக்கிய வகையில் பெண்ணியம் என்னும் தளம் உருவானது. இவ்வாறு உருப்பெற்ற பெண்ணிய சிந்தனை இன்றளவு தனிக்கோட்பாடாக வளர்ச்சிப் பெற்றுள்ளது பெண்ணியம் என்ற சொல்லுக்கு பெண் விடுதலை பெண் சமநிலை என்னும் சொற்கள் வழக்கத்தில் உள்ளன.

ஆணாதிக்கச் செயல்பாட்டுக்கு எதிரான பெண்ணியப் பதிவுகள் தலித் பெண்ணியக் கருத்தியல்கள், உடலியல் குறித்தக் கவிதை அரசியல் என பல பெண் எழுத்தாளர்கள் தங்களுடையக் கருத்தை நவீன இலக்கியங்கள் மூலம் வெளிப்படுத்தினர்.

## நவீன பெண் கவிஞர்கள்

சங்ககாலம் முதல் இக்காலம் வரை பெண்களின் பிரச்சனைகளையும் உணர்வுகளையும் ஆண்கள் தங்கள் பார்வையில் ஆராய்ந்து கவிதை புனைவது போலவே பெண்கள் தாங்கள் பார்வையில் நடக்கும் பிரச்சனைகளைக் கவனித்து கவிதை எழுதி வருகின்றனர்.

உலகம் முழுவதும் மெல்லப் பரவிய பெண்ணியம் பற்றிய கவிதைகள் படைக்கப்பட்டு வருகின்றது. சங்ககால பெண்பாற் புலவர்கள் 32 (இதில் கருத்து வேறுபாடு உண்டு). அதில் பெண்ணின் வீரத்தை பாடியவர் ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், ஆதிமந்தியார், வெள்ளிவீதியார், காக்கைபாடினியார், பாரிமகளிர் போன்றோர். இதில் ஔவையார்h;; அதியமான் என்ற அரசனுக்கு ஆலோசனை வழங்க தூது சென்றார். இப்படி சங்ககாலம் முதலே பெண் கவிஞர்கள் தவிர்க்க முடியாத கவிஞர்களாக உள்ளனர். இதே போல் நவீன

காலக்கட்டத்தில் நவீன இலக்கியங்களால் பெண் கவிஞர்களில் தவிர்க்க முடியாத கவிஞராக உள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்க கவிஞர்கள் அம்பை, சுகிர்தராணி, சல்மா இளம்பிறை, உமா மகேஸ்வரி, அ. வெண்ணிலா, தமிழச்சி தங்கபாண்டியன், குட்டி ரேவதி, கனிமொழி, கு. உமாதேவி இன்னும் பல பெண் கவிஞர்கள் தன் உணர்வுகளை வெளிப்படுத்தி வருகின்றனர். இதில் கவிஞர்கள் கு. உமாதேவி, சுகிர்தராணி அவர்களின் கவிதைகளில் அமைந்துள்ள பெண்ணியச் சிந்தனைகளை பற்றி இக்கட்டுரை அமைகிறது.

## கு. உமாதேவி

பேராசிரியராகவும் நவீன கவிஞராகவும் இவற்றுடன் பாடலாசிரியருமான கு.உமா தேவி அவர்கள் பற்றிய நவீன கவிதை வழியாகவும் திரைப்படப் பாடல்கள் வழியாவும் பெண்ணியம் மற்றும் பெண் தலித்தியம் பற்றி கருத்துகள் வெளிப்படுத்தி வருகிறார்.

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி நகருக்கு அருகில் உள்ள அத்திப்பாக்கம் என்ற ஊரில் 1983இல் விவசாய குடும்பத்தில் பிறந்தவர். பெற்றோர் து. குப்பன் - க. இந்திராணி அம்மாள். இவர் இளங்கலை பட்டப்படிப்பை செய்யாறு அரசு கலைக் கல்லூரியிலும் முதுகலை படிப்பை சென்னையிலும் படித்தார். சென்னை பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். தற்போது இவர் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறார்.

இவர் “திசைகளை பருகியவள்”; என்னும் கவிதை தொகுப்பின் வழியாக கவிதை உலகிற்குள் அறிமுகம் ஆனார் இந்த கவிதை தொகுப்பை அக்டோபர் 2006ஆம் ஆண்டு பனிக்குடம் பதிப்பகம் வெளியிட்டது பின்பு காலச்சுவடு பதிப்பகம் மூலம் மே 2016ஆம் ஆண்டு கு.உமாதேவியின் மற்றொரு கவிதை நூலான “தேன் இனிப்பது எல்லோருக்கும் தெரியாது” எனும் கவிதை தொகுப்பு வெளிவந்தது. தொடர்ந்து இவர் இலக்கியப் பதிப்புகளான தலித்தியம் குறித்த ஆய்வு கட்டுரைகள் எழுதுதல் சமூகத்தில் பெண் களின் ஒடுக்கு முறையை விவரித்து பெண் களுக்கு சாதி வழியிலான விடுதலையை முன்னிறுத்தி உரை நிகழ்த்துதல் நவீன கவிதைகள் எழுதுதல் என தன் படைப் பாற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.

அதேபோல தமிழ் சூழலில் பெண்களுக்கு ஒரு பார்வை இருப்பதைப் போல தலித்துகளுக்கு என்று ஒரு தனித்த பார்வையும் அதிலும் தலித் பெண்களுக்கு என்று ஒரு தனித்த பார்வையும் இருப்பதை இவர் கவிதைகளின் மூலம் வெளிப் படுத்துகின்றார் தற்பொழுது தமிழ் திரையில் இவரது கவிதை பங்களிப்புகள் திரை இசை பாடல்களாக வெளிவந்து கொண்டிருக் கின்றன.

## கவிதை வெளிப்பாடு

இயக்குநர் பா. இரஞ்சித் அவர்கள் கு. உமாதேவியின் கவிதை ஆற்றலை புரிந்துக் கொண்டு மெட்ராஸ் திரைப்படத்தில் வாய்ப்பு அளித்தார். அதை சரியாக பயன்படுத்திக் கொண்ட கு. உமாதேவி அவர்கள் தன் முதல் பாடல் “நான் நீ நாம்” என்ற பாடல் மிகப்பெரிய வரவேற்பு பெற்றது இதனை தொடர்ந்து பல திரைப்படத்திற்கு பாடல் எழுதி வருகிறார். அதில் கபாலி திரைப்படத்தில் “மாய நதி” என்ற பாடலும் காலா படத்தில் “கண்ணம்மா” பாடலும் மிகுந்த பாராட்டை பெற்றது.

ஐசக் நியூட்டனுக்கு ஆப்பிள் எத்தனை தடவை கீழ் விழுந்ததை பார்த்து இருக்கிறார். ஆனால் ஒரு நாள் மட்டும் ஏன் ஆப்பிள் கீழே விழுகின்றது மேலே செல்லவில்லை என்று யோசித்து ஈர்ப்பு விசையை கண்டுபிடித்தார் அதுபோல காலா படத்தில் வரும் கண்ணம்மா என்ற பாடலில் வரும் “ஊட்டாத தாயின் கணக்கின்ற பால்போல் என் காதல் கிடக்கின்றதே” என்ற வரி தான் என்னை ஈர்த்து இந்த ஆய்வில் கட்டுரையை எழுத வைத்தது.

இலக்கண இலக்கிய சொற்கள் அதிக அளவில் காணப்படும் கபாலி திரைப் படத்தில் தலைவனும் தலைவியும் பல ஆண்டுகளாக பிரிந்து வாழ்கின்ற வாழ்க்கையை அவர் அழகாக புறப்பொருள் இலக்கணத்தில் இருந்து சொல்லியிருப்பார்.

**“நான் உன்னை காணும் வரையில் தாபத நிலையே”**

**தாபத நிலை என்றால் “கணவனை இழந்த**

மனைவி"[1]

இவர் எழுதிய ஒரு கவிதையில்

"வாவெனப் போராடுகிறேன்

முடியாதென்ற முடிவில்

ஆங்காரமாயத் தன் போக்கிற்கு

பலவந்தப்படுத்தி இழுத்துச் செல்லும்

பல்யானை பலம் கொண்ட

வாழ்க்கை

அதன் பின்னால் போவதைத் தவிர

வேறென்ன செய்ய"[2]

என பெண்கள் போராடி அதில் வெற்றி பெற முடியாத சூழல் ஏற்பட்டால் இந்த சமூகமும் வாழ்க்கையும் அந்த பெண்ணின் விருப்பம்போல் வாழவிடாமல் கட்டாயப் படுத்தி விருப்பம் இல்லாத வாழ்க்கையை அளிக்கிறது இதை ஏற்று தான் ஆக வேண்டும் வேறென்ன செய்ய முடியும் என்று பெண்ணின் வலியை வெளிப் படுத்துகிறார்.

"நூலகத் திணையைத் தேய்த்துக்
கொண்டிருக்கும்

இரண்டு போக்கிரிகளும் ஏதோ சொல்ல

ஆண் சினேகம் கூடாதென"[3]

"ஆம்பள புள்ளையா இருந்தா பயம்
இல்லை"[4]

போன்ற கவிதைகளில் பெண் அடிமையும் ஆணாதிக்க சமூகத்தையும் எடுத்துரைக் கிறார். ஒரு பெண்ணாக பிறந்து விட்டால் அவள் எந்த ஆண்களுடனும் நட்பு கொள்ளக்கூடாது என்று இந்த சமூகம் நினைக்கின்றது.

ஆண் பிள்ளையாக இருந்தால் கஷ்டம் இல்லை பயம் இல்லை பெண் பிள்ளையாக இருந்தால் படிக்க வைக்க வேண்டும் மஞ்சள் நீராட்டு விழா, கல்யாணம் என பல செலவுகள் மற்றும் பெண் பிள்ளைகளை பாதுகாப்பாக வளர்க்க வேண்டும.; பெண் பிள்ளைகள் பிறந்தாலே இந்த சமூகம் அவளை ஒரு சுமையாக பார்க்கின்றது இந்த கவிதையின் மூலம் விளக்கியுள்ளார் இவ்வாறு கு. உமாதேவி கவிதைகளில் பெண்ணிய சிந்தனை போக்குகள் தெளிவாக காட்டப்படுகிறது.

### சுகிர்தராணி

இராணிப்பேட்டை மாவட்டதில் உள்;ள லாலாபேட்டை என்னும் ஊரை சேர்ந்தவர் இவர் கூலி தொழிலாளியின் மகளாக 1973இல் பிறந்தார். தற்போது அரசு பள்ளி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். இவரது படைப்புகளில் பெண்ணுடலைக் கொண்டா டுவதையும் தலித்தாகவும் பிறந்த இரட்டை அனுபவத்தை உள்ளடக்கியதாக இருக்கும். மேலும் இவர் 2020ஆம் ஆண்டு விளக்கு எனும் உயரிய விருதை பெற்றார்.

### கவிதை வெளிப்பாடுகள்

சுகிர்தராணியின் நவீன கவிதையில் தீட்டு என்று ஒதுக்கப்பட்ட பெண் உடலை ஆணிற்கு எதிரான ஆயுதமாக பயன்படுத்தி உலக உருவாக்கத்தில் பெண்ணே அதே போல பெண்களின் பிரச்சனைகளையும் இவர் தீண்ட தகாதவர்களின் பிரச்சனை களில் ஒன்றாகவே பார்க்கிறார். இருவருக்கும் தீட்டு என்னும் கருத்து தனிப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டி சாதி அமைப்பிலிருந்து தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஆணாதிக்க சமூக அமைப்பிலிருந்து பெண்களும் முழு விடுதலையை வேண்டியதாக இவரது கருத்துக்கள் அமைத்திருக்கின்றன.

### படைக்காளுகைகள்

சுகிர்தராணியின் முதல் கவிதை தொகுப்பு 2002இல் கைப்பற்றி என் கனவுகேள் என்னும் தலைப்பில் வெளியானது. அதை தொடர்ந்து 2004இல் இரவு மிருகம், 2006 இல் அவளை மொழிபெயர்த்தல், 2010இல் தீண்டப்படாத முத்தம், 2012இல் காமத்தீப, 2016இல் இப்படிக்கு ஏவாள் உள்ளிட்டத் தலைப்புகளில் கவிதை தொகுப்புகள் வெளிவந்துள்ளன.

அம்மா பற்றிய இவர் எழுதிய கவிதை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது இதற்கு முன்னால் அம்மா பற்றிய கவிதை பல வந்தாலும் இவர் எழுதிய கவிதை மிகவும் சிறப்பு பெற்றது.

அம்மா

…..

"என் பிஞ்சுவிரல்களை விலக்கிவிட்டு

நீயே பிசைந்து சோறூட்டுவாய்

பின் நீ வெறும்நீரால்

பசியாறிக் கொள்வாயாம்

நாளெல்லாம் நாற்று நட்டு

**மடிநிறைய மாம்பபிஞ்சுகளோடு திரும்புவாய்**
**அவற்றிலும்**
**தாய்ப்பாலின் வாசனை வீசும்**
**உழைத்து உரமேறிய உன் பாதங்கள்**
**சிறகுகளால் போர்த்தப்பட வேண்டியவை**
**தொலைவில்**
**அத்தனை பிரியங்களையும் கையில் ஏந்தி**
**வந்துகொண்டிருக்கிறேன்**
**எப்படி உன்னை மறவேன் அம்மா**
**சுடுகாட்டில் வேகுதடி உன்னுடல்"[5]**

ஒரு மகளாக தாயின் பாசத்தை உணர்த்து கின்ற கவிதையாக இது அமைகின்றது.

மேலும் பெண்ணிய ஒடுக்கு முறைக்கு எதிரான சிந்தனைகளை கவிஞர் வெளிப் படுத்துவதை காணலாம்.

அதேபோல, வீட்டில் வயதான தந்தை எல்லாவற்றை மறதியில் தேடிக்கொண்டு இருக்கும் பொழுது அதனை நினவுறுத்தும் மூத்தப் பெண்ணின் மனப்பதிவாக இடம் கீழ்க்காணும் கவிதை முதிர்க்கன்னியின் மனநிலைப் பதிவு செய்யும் கவிதைகயாகச் சிறப்பிடம் பெறுகிறது.

**"சமையலறை தேடி**
**நீரருந்திவிட்டு திரும்பும் அவருக்கு**
**எதைச் சொல்லி**
**என் வயதை**
**ஞாபகப்படுத்த."[6]**

திருமணம் செய்ய வேண்டிய வயதை தாண்டியும் திருமணம் செய்து வைக்காமல் இருக்கும் தந்தையின் போக்கை இக்கவிதை காட்டுகிறது.

## முடிவுரை

நவீன கவிதைகளில் பெண்ணிய வெளிப் பாடுகள் பெரும்பான்மையும் தீவிரவாத பெண்ணியக் கோட்பாட்டைச் சார்ந்தவை களாகவே இருக்கின்றன உதாரணமாக ஆணாதிக்க மனோபாவத்தின் வெளிப் பாடாக அமையும் கவிதைகளை குறிப்பிடலாம்

பெண் எழுத்துக்கள் பெண்ணிய விடுதலை சமூக நீதி சமத்துவம் சம உரிமை என்னும் கருத்துக்களை பரவலாக வெளிப்படுத்து பவைக்கலாக உள்ளன.

குடும்ப அமைப்பு இந்திய சமுதாயத்தின் உயிர்நாடியாக பார்க்கப்பட்டு அதன் வழியிலான திருமண முறை வரதட்சனை பெண் அடிமைக்கு போக்கு முதிர்கன்னிகள் உருவாக்கத்திற்காக சூழல் முதலான அவலங்களை பெண்ணிய கவிதைகள் விவரிக்கின்றன.

ஒழுக்கம் என்னும் நெறியியல் காணலாகும் முரண்பாடுகளை விவரிப்பதாகவும் அதன் வழி ஆணாதிக்க அரசியல் முன்னெடுக்கப் படுவதாகவும் பெண்ணிய கவிஞர்கள் கற்பு ஒழுக்கம் குறித்த கோட்பாடுகளை விமர்சிக்கின்றன.

## அடிக்குறிப்பு

1. ச. திருஞானசம்பந்தம் - புறப்பொருள் வெண்பாமாலை (பக்-274)
2. கு. உமாதேவி - தேன் இனிப்பது எல்லோருக்கும் தெரியாது (பக்-35)
3. கு. உமாதேவி-திசைகள் பருகியவள்(பக்-18)
4. மேலது (பக்-23)
5. சுகிர்தராணி-தீண்டப்படாத முத்தம் (பக்-18)
6. சுகிர்தராணி-கைப்பற்றி என் கனவுகேள் (பக்-19)

## துணைநூற் பட்டியல்


1. எஸ். கௌமாரீஸ்வரி, நவீன கவிதை களில் பெண்ணியமும் தலித்தியமும் கௌரா பதிப்பகம், திருவல்லிகேனி, சென்னை 600005, முதல் பதிப்பு (2008)
2. ச.திருஞானசம்பந்தம், புறப்பொருள் வெண்பா மாலை, கதிர் பதிப்பகம், தெற்கு வீதி திருவையாறு 613 204.
3. சுகிர்த ராணி, தீண்டப்படாத முத்தம், காலச்சுவடு பப்ளிகேஷன், 669,கே.பி. சாலை நாகர்கோவில் 609 001. முதல் பதிப்பு (2019)
4. கு. உமாதேவி, திசைகள் பருகியவள் பனிக்குடம், பதிப்பகம் (2006), 137 ஜானி ஜான்சன் சாலை, ராயப்பேட்டை, சென்னை 14
5. கு. உமாதேவி, தேன் இனிப்பது எல்லோருக்கும் தெரியாது, காலச்சுவடு பப்ளிகேஷன் (2016), 669, கே. பி. சாலை, நாகர்கோவில் 629 001.
6. சுகிர்தராணி, கைப்பற்றி என் கனவுகேள், பூங்குயில் பதிப்பகம், வந்தவாசி 604 408